மதுரையில் சென்னை உயர்நீதிமன்றத்தின் இளை.

*5509 திரு. திரு. அ. லெ. சுப்பிரமணியன் :

திரு. துரை சந்திரசேகரன் :

பேராசிரியர் க. பொன்னுசாமி :

திரு. ஆ. அறிவழகன் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை உயர்நீதி மன்றத்தின் கிளை ஒன்றை ஓய்வு பெற்ற உச்சமன்ற நீதிபதி திரு. ஐஸ்வந்த சிங் கமிஷன் பரிந்துரையின்படி மதுரையில் அமைக்கின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதனை தாமதமின்றி அமைக்க மத்திய அரசைத் தமிழக அரசு வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : சென்னை உயர்நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றினை மதுரையில் நிறுவும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ரத்தினவேல் பாண்டியன் அவர்கள் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்த போது இந்த அறிக்கை விவாதிக்கப்பட்டு, நீதிபதிகளுக்கு மதுரையில் வசதியான வீடுகள் இல்லை, அவர்கள் பிள்ளைகள் படிப்பதற்கு வாய்ப்பில்லை என்று கருதி, இந்தத் தீர்மானத்தையே ஒத்தி வைத்தார்கள். உயர்நீதிமன்ற வழக்கறிஞர்களும் தங்களுடைய தொழில் பாதிக்கப்படும் என்று இதற்கு எதிராக இருக்கிறார்கள். ஆனால் இன்றைய சூழ்நிலையில் 25 நீதிபதிகள் என்பதை 32 நீதிபதிகளாக உயர்த்தி இருக்கிறோம். மேலும் உயர்நீதிமன்றத்தில் இட நெருக்கடி இருக்கிறது. மதுரை நீதிமன்றத்தில் ஏராளமான இடம் இருக்கிறது. இதையெல்லாம் கருத்திலே கொண்டு, மீண்டும் அரசு வலியுறுத்தி, மதுரையில் கிளையை அமைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

9-15 மணி

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதிமன்றத்திற்கு மேலும் கூடுதலாக 7 நீதிபதிகளை நியமிப்பதற்கு இந்த

1990 ஏப்ரல் 21]

அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருப்பதாலும், இது தொடர்பாக இதற்கு முன் விவரித்த காரணங்களினாலும், மற்றும் ஜஸ்வந்த் சிங் குழுவின் சிபாரிசு அடிப்படையிலும், சென்னை உயர்நீதி மன்றத்தின் ஆயத்தை மதுரையில் நிறுவ, அதன் மூலம் மாநிலத்தின் தெற்குப் பகுதியிலுள்ள மக்கள் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றிட வேண்டுமென்று, மத்திய சட்ட அமைச்சருக்கு 2—10—1989ஆம் தேதியன்று நமது முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதியிருந்தார். அந்தக் கடிதத்திற்கு பதிலாக, தற்போதுள்ள மத்திய சட்ட அமைச்சர் 8–2–1990ஆம் நாளிட்ட கடிதத்தில், மதுரையில், உயர்நீதி மன்றத்தின் ஆயத்தை அமைப்பதற்கு உரிய வசதிகள், மற்றும் உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி, ஆளுநர் ஆகியோருடைய கருத்துக்களைக் கேட்டு அனுப்பும்படி சொல்லியிருக்கிறார். உயர் நீதிமன்றத்தினுடைய கருத்துக்களை நாம் கேட்டிருக்கிறோம். ஒரு சாதகமான சூழ்நிலை ஏற்படுமென்று எதிர்பார்க்கிறேன்.

திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிபதி ஜஸ்வந்த் சிங் கமிஷன் எப்போது பரிந்துரை செய்துள்ளது. எவ்வளவு காலமாக இக்கோரிக்கை தொடர்பாக மத்திய அரசை, மாநில அரசு வலியுறுத்தி வந்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கையை முதன்முதலாக நம்முடைய அரசு 1973ஆம் ஆண்டிலே வற்புறுத்தி வந்திருக்கிறது. ஜஸ்வந்த் சிங் கமிஷன் 1981-ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டது. ஜஸ்வந்த் சிங் கமிஷனுடைய அறிக்கை 1984-ல் கிடைக்கப்பெற்றது. இந்த அறிக்கைக்குப் பிறகு, மாநில அரசு மத்திய அரசினுடைய கருத்துக்களையும், மாநில உயர்நீதி மன்றத்தினுடைய கருத்துக்களையும் கேட்டிருக்கிறது.

பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு, சில கருத்துக்களைக் கேட்டிருக்கிறது. இப்போது பந்து மாநில அரசாங்கத்தின் மைதானத்தில்தான் இருக்கிறது என்று மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 2 மாதங்களுக்கு முன்பே கடிதம் வந்திருக்கிறது. இதை விரைவுபடுத்தி, தென் மாவட்டங்களிலே உள்ள மக்களின் நன்மைக்காக உடனடியாக ஏற்பாடுகளை இந்த அரசு விரைந்து செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை விரைந்து செய்வதற்காகத்தான் 2–10–1989-ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய சட்ட அமைச்சருக்குக் கடிதம் எழுதினார்கள்.

அந்தக் கடிதத்திற்கு பதில் 8-2-1990 அன்று மத்திய சட்ட அமைச்சர் அனுப்பினார்கள். மத்திய சட்ட அமைச்சருடைய கடிதம் மூலமாக, அதேபோல் நம்முடைய அரசாங்கம் ஆளுநருடைய கருத்துக்கள், தலைமை நீதிபதியினுடைய கருத்துக்கள் எல்லாம் கேட்டு அனுப்பியிருக்கிறோம். அதை உடனடியாகப் பெற்று, மத்திய அரசுக்கு அனுப்ப மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் ஏற்பாடு செய்யப்படும்.

திரு. ஆ. அறிவழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜஸ்வந்த் சிங் கமிஷனின் அறிக்கை எந்த ஆண்டு கிடைத்தது? என்ன காரணத்தினால், மத்திய அரசு பச்சைக் கொடி காட்டவில்லை. மதுரையில், உயர்நீதிமன்றத்தின் கிளை அமைக்கப்பட்டால், அது தென்மாவட்ட மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும். குறைந்த செலவில், நீதி மக்களுக்குக் கிடைத்தால்தான், நீதித்துறையின் மீது மக்களுக்கு நம்பிக்கை நிலைத்திருக்கும். அதற்காக, மதுரை கிளை உறுதுணையாக இருக்கும். மேலும், சென்னை உயர் நீதிமன்றத்திற்குக் கூடுதலாக 7 நீதிபதிகளை நியமிக்க மத்திய அரசு ஒத்துக்கொண்டுள்ளது என்று சில தினங்களுக்கு முன்னால் நம்முடைய சட்ட அமைச்சர் அறிவித்துள்ளார். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, மதுரையில் கிளை அமைக்க மத்திய அரசை மாநில அரசு ஆணித்தரமாக வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் கிளை அமைக்க வேண்டும் என்பது 1972ஆம் ஆண்டில் வற்புறுத்தப்பட்டது. அதற்குப் பிறகு, ஜஸ்வந்த் சிங் கமிஷன் நியமிக்கப்பட்டது. அதனுடைய அறிக்கையும் பெறப்பட்டது. ஆனால் அரசியல் சட்டம் 346-வது பிரிவின் படி உயர்நீதிமன்றத்தின் கிளை அமைக்க வேண்டிய அதிகாரம், மத்திய அரசிடம்தான் இருக்கிறது. எனவேதான் மத்திய அரசிடம் தொடர்பு கொண்டிருக்கிறோம். நாம் மீண்டும் மீண்டும் கடந்த 1972-லிருந்து வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். இப்போது சாதகமான சூழ்நிலை இருப்பதாகக் கருதுகிறோம்.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய கிளை ஒன்றை மதுரையிலே அமைப்பதற்கு ஜஸ்வந்த் சிங் குழு பரிந்துரை செய்ததாகச் சொன்னார்கள். அது சென்னைக்கும், கன்னியாகுமரிக்கும் இடையிலே—மதுரையை விட திருச்சிதான் சிறந்த இடம் என்று அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற இடம்—ஆகவே, கடந்த ஆட்சியிலே கூட, இரண்டாவது தலைநகரமாக இருப்பதற்கு திருச்சிதான் பொருத்தமானஇடம் என்றும்

1990 ஏப்ரல் 21]

சொல்லப்பட்டது. இந்த நிலையிலே, அந்த உயர்நீதிமன்றத்தினுடைய கிளையை திருச்சியிலே அமைக்கின்ற செயற்குறிப்பை நம்முடைய அரசு சிபாரிசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

9-20 மணி.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பெயரே மலர்மன்னன். மன்னர்கள் ஆட்சி நடைபெற்றால் அப்படிச் செய்யலாம். மக்கள் ஆட்சியில் அப்படி குறிப்பிட்ட ஒரு முடிவை எடுத்தபின் மாற்றுவதற்கு வாய்ப்பு இல்லை.

திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்தின் பிரிவை மதுரையில் ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை மிக நீண்டகாலமாக வலியுறுத்தப்பட்டு வருகிற காரணத்தாலும், தென் மாவட்டங்களுக்கு அது முக்கிய தலைநகராக இருப்பதாலும் மதுரையிலேயே அதை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினையே மதுரையில் அமைப்பதைப் பற்றித்தான். வேறு ஒன்றுமல்ல.

திரு. உ. ரா. வரதராசன்: தலைவர் அவர்களே, மத்திய அமைச்சர் அவர்கள் எழுதிய கடிதத்தில், சென்னை உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி மற்றும் ஆளுநர் அவர்களின் கருத்தும் கோரப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆளுநரும், உயர்நீதிமன்ற நீதிபதியும் இதற்கு இசைவான கருத்தைத் தெரிவித்திருக்கிறார்களா இல்லையா என்பதை இந்த அவைக்கு அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில உயர்நீதிமன்றத்தின் ரிஜிஸ்திரார் மூலமாகக் கேட்கப்பட்டிருக்கிறது. இன்னும் பதில் வரவில்லை. அவர்கள் கருத்து இன்னும் கிடைக்கப் பெறவில்லை.